கணிதம்

ஆய்ந்தறி சோதனைகள்

DIAGNOSTIC TESTS

# அட்சரகணிதம்

கணிதத்துறை

விஞ்ஞான. தொழிநுட்ப பீடம்

தேசிய கல்வி நிறுவகம்

ஸ்ரீ லங்கா

# பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

எமது நாட்டுக் கணிதக் கல்வியினால் எதிர்பார்த்த இலக்குகளை அடைய முடியாத நிலை தொடர்ந்தும் காணப்படுகின்றது என்பது, கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர), கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சைப் பெறுபேற்றுப் பகுப்பாய்வினால் காட்டப்படுகின்றது. இது நாட்டின் எதிர்கால அபிவிருத்தி மீது பாதகமான வகையில் செல்வாக்கு செலுத்தத்தக்க ஒரு காரணியாகும். இந்த யதார்த்தத்தை இனங்கண்டு அதற்குத் தீர்வு காண்பதற்கான பல்வேறு நடவடிக்கைகளைத் தேசிய கல்வி நிறுவக கணிதத் துறையினர் மேற்கொண்டு வருவது பாராட்டுக்குரியதாகும்.

எத்தனைதான் சோதனை வகைகள் பரவலாகக் காட்டப்பட்ட போதிலும், குறைந்த அடைவு மட்டத்தைக் காட்டும் மாணவரை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்ட சோதனைகள் இலங்கையில் அரிதாகவே காணப்படுகின்றன. மாணவரது கற்றல் பிரச்சினைகளை இனங்கண்டு, அவற்றைப் பகுப்பாய்வு செய்வதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஆய்ந்தறி சோதனைகள் மாணவரது கற்றல் செயன்முறையையும் ஆசிரியரது கற்பித்தற் செயன்முறையையும் விருத்தி செய்வதற்குத் துணையாகும் என்பதில் ஐயமில்லை. தரமான கற்றலுக்கு, இச் சோதனைகள் பெருந்துணையாக அமையும்.

கணித பாட கற்றல்-கற்பித்தல்- மதிப்பீட்டுச் செயன்முறையின் வெற்றிக்காக இந்த ஆய்ந்தறி சோதனைகளைப் பயன்படுத்துமாறு அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் வேண்டுகின்றேன்.

இவ்வாய்ந்தறி சோதனைகள் உங்களது கைகளை வந்தடைவதற்காக அனுசரணை வழங்கிய ஆசிய அபிவிருத்தி வங்கிச் (ADB) செயற்றிட்டத்துக்கும், இக்கருமத்தின் வெற்றிக்காகப் பாடவிடயப் பங்களிப்பு வழங்கிய கணிதத் துறைப் பணியணியினருக்கும் வெளிவாரி வளவாளர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள் உரித்தாகும்.

**பேராசிரியர் டபிள்யு. எம். அபேரத்ன பண்டார**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்.

# முன்னுரை

கணித பாடத்தின் மூலம் மாணவரிடத்தில் விருத்தி செய்ய எதிர்பார்க்கும் ஆற்றல்களுள் அறிவும் திறன்களும், தொடர்பாடல், தொடர்பு காணல், காரணங்காட்டலும் பிரச்சினை தீர்த்தலும் போன்றவை முக்கியமானவை. எந்த ஒருவரும் தமது பொது வாழ்க்கையில் விருத்தி செய்துகொள்ள வேண்டிய திறன்கள் இவை என்பதை எமது நடைமுறை வாழ்க்கையை நோக்குவதால் அறிந்து கொள்ள முடிகின்றது. இருந்த போதிலும், சில தசாப்தங்களாக கணித பாட அடைவு மட்டத்தை மேம்படுத்துவதற்காகப் பல்வேறு உத்திகள் கையாளப்பட்ட போதிலும் மாணவரது அடைவு மட்டம் 50 சதவீதத்தை அண்டியதாகவே காணப்படுகின்றமை யைக் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதரண தர) பரீட்சைப் பெறுபேறுகள் காட்டி நிற்கின்றன. மேலும் க.பொ.த உயர்தரத்தில் சேர்ந்து பயிலுவதற்கும் கணிதபாடச் சித்தி இன்றியமையாததாகும்.

மேற்படி விடயங்களை நோக்குகையில், கணித பாடத்தில் மாணவரது அடைவு மட்டத்தை மேம்படுத்துவதற்காகத் தற்போது பயன்பாட்டில் உள்ள முறைகள், உத்திகள் போதுமானவை யல்ல என்பது தேசிய கல்வி நிறுவக கணிதத் துறையினரின் கணிப்பாகும். இதற்கான ஒரு மாற்றுத் தீர்வாக, ஆய்ந்தறி சோதனைகள் (Diagnostic Tests) குறித்துக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. கணித பாடத்தின் சகல எண்ணக்கருக்களையும் விளங்கிக் கொள்வ தற்காக, அவ்வெண்ணக்கருக்களுக்கு இடையிலான கிடை மற்றும் நிலைக்குத்து ஒன்றிணைப்பு பற்றிய தரவு அவசியமாகும். மேலும் ஒவ்வோர் எண்ணக்கருவிலும் எளிமை நிலை தொடக்கம் சிக்கலான நிலை வரையிலான விளக்கமும் அவசியமாகும். எனவே அந்தந்த மாணவன் அந்தந்தக் கணித எண்ணக்கருக்களில் அறிந்து வைத்திருக்கும் மட்டத்தை விளங்கி, அந்நிலையிலிருந்து அவ்வெண்ணக்கருக்களைக் கற்பதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிப்பது ஒவ்வோர் ஆசிரியரதும் பொறுப்பாகும். எனவே ஆசிரியர் தமது மாணவனின் கணித இயலுமை களையும் இயலாமைகளையும் இனங்கண்டு கொள்ளக்கூடியவாறு அந்தந்த கருப்பொருளின் உள்ளடக்கம் குறிப்பான பல படிமுறைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவ்வொவ்வொரு படிமுறை யிலும் மாணவர் பெறவேண்டிய அறிவை இனங்காண்பதற்குப் பொருத்தமான வினாக்கள், மாணவருக்கு பொருத்தமானவாறு தயாரிக்கப்பட்டுள்ளன. ஆசிரியர் தமது மாணவனின் கணித இயலுமைகளையும் இயலாமைகளையும் அந்தந்த மாணவனின் அறிவு மட்டத்தையும் இனங்கண்டு கொள்வதற்கு இவை பெரிதும் துணையாகும்.

ஆசிரியர் இச்சோதனைகள் அதாவது கருவிகள் பற்றிய விளக்கத்தைப் பெற்று தமது மாணவருக்குப் பொருத்தமான வினாத்தொகுதிகளை வழங்குவதன் மூலம் தமது கருமங் களையும் மாணவரது கருமங்களையும் இலகுபடுத்திக் கொள்ளலாம்.

இக்கருவிகளின், நடைமுறைச் சாத்தியம், தகுதி (Validity) ஆகியவற்றை இனங்காண்பதற்காக கையாண்டுபார்க்கப்பட்டது. மாணவரது கணித அறிவைப் படிப்படியாக வளர்ப்பதற்கு இக்கருவிகள் துணையாகும். இந்தப் பணிக்காகப் பங்களிப்புச் செய்த, தேசிய கல்வி நிறுவகச் செயற்றிட்டக் குழுவுக்கும், வெளிவாரியாகப் வளப்பங்களிபுச் செய்தோருக்கும் கையாண்டு பார்த்தலில் பங்களிப்புச் செய்தோருக்கும் ஏனைய பணிகளில் பங்களிப்புச் செய்தோருக்கும் எமது நன்றி உரித்தாகும்.

**கே. ஆர். பத்மசிறி**
பணிப்பாளர்.
கணிதத்துறை,
தேசிய கல்வி நிறுவகம்.

# அறிமுகம்

கணிதம் எண்ணக்கருக்கள் சார்ந்த கருத்துநிலையான ஒரு பாடமாகும் என்பது கல்வியிய லாளரின் அபிப்பிராயமாகும். கணிதம் கற்கும் போது கணித எண்ணக்கருக்கள், படிப்படியாகவும் ஒழுங்குமுறையாகவும் கட்டியெழுப்பப்படும். முதன்மையான எண்ணக்கருக்கள் சரியாகச் கிரகிக்கப்படாதவிடத்து பிற்காலத்தில் துணை எண்ணக் கருக்களைக் கிரகிப்பதில் இடர்ப்பாடுகள் தோன்றும். அதன் விளைவாக விடய அடைவில் குறையேற்படும். அடைவுக் குறைபாடு காரணமாக, கல்வி மீதான ஆர்வம் குறைவடைவதால் மாணவர் கற்றலினின்று நீங்க முனைவர். கூடவே கணிதம் குறித்து ஒருவித அச்சத்தையும் ஏற்படுத்திக் கொள்வர். இந்நிலை எமது நாட்டுப் பிள்ளைகளின் கல்வியுடன் நேரடியாகத் தொடர்புபட்டுள்ளது எனலாம்.

## ஆய்ந்தறி சோதனை என்பதால் கருதப்படுவது யாது?

மாணவரிடத்தில் காணப்படும் சிற்சில நலிவுகளையும் வலிவுகளையும் இனங்காணும் நோக்குடன் நடத்தப்படும் சோதனைகளை ஆய்ந்தறி சோதனைகள் எனப்படுகின்றன. கற்பித்தல் வேலைத் திட்டத்தின் தொடக்கத்திலேயே அடிப்படைத் திறன்களில் மாணவர் காட்டும் குறைபாடுகளை இனங்கண்டு கொள்வது அவசியமாகும். இவ்வாறான குறைபாடுகளை இனங்காண்பதற்காகவே ஆய்ந்தறி சோதனைகள் தயாரிக்கப்படும். யாதேனும் குறிப்பான கற்கைப் பரப்பு அல்லது பாடவிடயம் சார்பாக மாணவன் வெளிக்காட்டும் குறிப்பான குறைபாடுகளையும் திறமை களையும் கண்டறிவதற்காகவும் ஆய்ந்தறி சோதனைகள் தயாரிக்கப்படும். எந்தவொரு கற்பித்தற் செயன்முறையினதும் வினைதிறன்மிக்க போதனா வழிகாட்டலினதும் அடிப்படையாக அமைவது ஆய்ந்தறிகையாகும்.

ஆசிரியரது வகிபாகம், மாணவரிடையே பண்புத்தரமிக்க கற்றற் செயன்முறையை உருவாக்குவ தாகும். மாணவர் செயல் ரீதியில் கற்றற் செயன்முறையில் ஈடுபடுவாராயின் மாத்திரமே இது சாத்தியமாகும். தமது கற்றல் - கற்பித்தற் செயன்முறையின் போது கற்றலில் விடும் தவறுகளை இனங்கண்டுகொள்வது அவசியமாகும். இப்படிமுறையின் போது ஆசிரியரது கருமம் ஒரு வைத்தியனின் கருமத்தை ஒத்ததாகும். வைத்தியர் தமது நோயாளியின் நோயை இனங்காண்பதற்காக பல்வேறு சோதனைகளை நடத்தி நோயைக் கண்டறிந்து அந்நோய்க்குரிய பரிகாரத்தைச் செய்வார். கல்வித் துறையில் நடாத்தப்படும் ஆய்ந்தறி சோதனைகளும், நோயைக் கண்டு பிடிப்பதற்காக வைத்தியர் நடத்தும் சோதனைகளுக்கு ஒப்பான நடத்தையையே காட்டும்.

## ஆய்ந்தறிந்தவற்றை வகுப்பறையில் எவ்வாறு பயன்படுத்தலாம்?

குறித்த பாடப்பரப்பை அல்லது அலகைப் பூர்த்தி செய்த பின்னர் ஒரு சோதனையினால் மாணவரது அடைவு மட்டம் கணிப்பீடு செய்யப்படும். இம்மதிப்பீட்டின் மூலம் மாணவர் தொடர்பான சில முடிவுகளைக் காட்டுவர். மற்றும் சில மாணவர்கள் எதிர்பார்க்கப்பட்ட அடைவு மட்டத்தை அடையவில்லை என்பன உறுதிப்படுத்திக் கொள்ளலாம். இனி இவ்வாறாக எதிர்பார்க்கப்பட்ட அடைவு அடையாத அதாவது மெல்லக் கற்கும் மாணவர்கள், அந்நிலையில் காணப்படுவதற்காக காரணங்கள் எவை என்பதைத் தேடியறிதல் வேண்டும். இந்நிலைமைக்கான காரணங்கள் பல இருக்க இடமுண்டு. குறிப்பாக தவறுவிட்டுள்ள கடினமான பாடப்பரப்புக்கள் எண்ணக்கருக்கள் எவை என்பதை தேடியறிவது அவசியமாகும். இவ்வாறாக கற்றலில் இடர்ப்பாடுகள் காணப்படும் விடயப்பரப்புக்களை இனங்கண்டு, அதற்கான காரணங்களைத் தீர்மானிப்பதற்காக ஆய்ந்தறி சோதனைகளைப் பயன்படுத்த வேண்டும்.

கற்றலில் இடர்ப்பாடுகளைக் காட்டும் விடயப்பரப்புக்களை இனங்கண்ட பின்னர் மாணவர் நன்கு துலங்கல் காட்டாமைக்கான காரணங்களைத் தேடியறிதல் வேண்டும். இங்கு ஆசிரியரது பணி நோயாளியினது நோயைக் கண்டு பிடிப்பதற்காகச் சோதனைகளை நடத்தும் வைத்தியரின் பணிக்கு ஒப்பானது. கல்விச் செயன்முறையின் போது மாணவரது மேற்படி நிலைமையைத் தேடியறிவதற்காகக் கையாளப்படும் வழியே ஆய்ந்தறி சோதனை எனப்படுகின்றது.

ஆய்ந்தறி சோதனையின்போது பின்வரும் படிமுறைகள் குறித்துக் கவனஞ் செலுத்துதல் வேண்டும்.

i உதவி தேவைப்படும் மாணவர்கள் யாவர்?
ii மாணவர் தவறுவிடும் பாடப்பரப்புகள் / எண்ணக்கருக்கள் யாவை?
iii அத்தவறுகள் ஏற்பட்டுள்ளமைக்கான காரணங்கள் யாவை?

மேற்படி விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கணித பாடத்துக்காக ஐந்து ஆய்ந்தறி சோதனைத் தொகுதிகள் தேசிய கல்வி நிறுவக கணிதத் துறையினரால் தயாரிக்கப்பட்டன. குறைந்த அடைவுமட்டத்தைக் காட்டுபவையான கற்றல் இடர்ப்பாடுகளுள்ள பாடப்பரப்புக்களை இனங்கண்டுள்ளனர். அக்கற்றல் இடர்ப்பாடுகளுக்கான காரணங்களைத் தேடியறிவதற்காக ஆய்ந்தறி சோதனைகளைப் பயன்படுத்தலாம். இவ்வொவ்வோர் ஆய்ந்தறி சோதனையும் ஏறத்தாழ 40 நிமிடங்களில் பூர்த்தி செய்யத்தக்கதாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

## ஆய்ந்தறி சோதனைகளைத் தயாரிப்பதற்காகக் கையாளப்பட்ட படிமுறைகள்:

1. பிரதான அலகை, குறிப்பான சிறுசிறு உப அலகுகளாக வகுத்தல்.
2. குறிப்பான வினாத்தொடரொன்றினைப் பட்டியற்படுத்தல் அவ்வொவ்வொரு வினாவையும் குறித்த ஒவ்வொரு விடயத்தினை மாத்திரம் சோதிப்பதற்காகத் தயாரித்தல்.
3. அவ்வொவ்வொரு விடயத்துக்கும் ஒரே வகையைச் சேர்ந்த மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட வினாக்கள் முன்வைத்தல்.

ஆய்ந்தறி சோதனைனகளின் தகுதியை (Validity) உயரிய மட்டத்தில் பேணுவதே இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஆய்ந்தறி சோதனைகளின் உள்ளடக்கம்

ஒவ்வொரு தலைப்பின் கீழும், ஆய்ந்தறி சோதனைகளில் பின்வரும் அடிப்படை அம்சங்கள் உள்ளடக்கப்பட்டள்ளன.

1. **விடயப்பகுப்பாய்வு.**
   பிரதான அலகு, உப அலகுகள், சிறப்புக் குறிக்கோள்கள், அந்தந்தக் குறிக்கோளுக் குரிய வினா இலக்கம் ஆகியன உள்ளடக்கப்பட்டிருத்தல்.
2. **ஆய்ந்தறி சோதனை வினாப்பத்திரம்**
   ஒவ்வொரு வினாப்பத்திரமும் 40 நிமிட நேரத்தில் செய்து முடிக்கத்தக்கவாறு தயாரிக்கப்பட்டுள்ளது.
3. **விடைகளும் அறிவுறுத்தல்களும்.**
   மாணவர்கள் விடையளிக்கும் போது அவ்விடைகளில் உள்ளடங்க வேண்டிய விடயங்களும் அவற்றின் மட்டங்களும் அறிவுறுத்தல்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## இந்நூலின் பொருளடக்கம்

இந்நூலில், அட்சரகணிதக் கோவைகள், காரணிகள், எளியசமன்பாடுகள், வரைபுகள் ஆகிய கருப்பொருள்களின் கீழ் தயாரிக்கப்பட்ட ஆய்ந்தறி சோதனைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அட்சரகணிதக் கோவைகள் எனும் கருப்பொருளின் கீழ் தயாரிக்கப்பட்ட இரண்டு சோதனைகளும், காரணிகள் எனும் கருப்பொருளில் தயாரிக்கப்பட்ட இரண்டு சோதனைகளும், எளிய சமன்பாடுகள் எனும் கருப்பொருளின் கீழ் தயாரிக்கப்பட்ட ஒரு சோதனையும், காரணிகள் எனும் கருப்பொருளில் தயாரிக்கப்பட்ட இரண்டு சோதனைகளும், இதில் அடங்கியுள்ளன. அவற்றை பின்வருமாறு காட்டலாம்.

1. அட்சரகணிதக் கோவைகள் I
2. அட்சரகணிதக் கோவைகள் II
3. காரணிகள் I
4. காரணிகள் II
5. எளிய சமன்பாடுகள்
6. வரைபுகள் I
7. வரைபுகள் II
8. வரைபுகள் III
9. வரைபுகள் IV

### கணிதத்திறன் மதிப்பீட்டின்போது கவனத்திற் கொள்ள வேண்டிய காரணிகள்:

1. செம்மை
2. துலங்கல் வேகம்
3. விருத்தி மட்டம்
4. பண்புத்தரம்
5. அனுபவப்பரப்பு ( திறன் வீச்சு)
6. சிந்தனை முறையும் ஆற்றுகையும்

## தரப்பட்டுள்ள ஆய்ந்தறி சோதனைகளைப் பயன்படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்கள்:

1. ஆய்ந்தறி சோதனை வழங்குவதற்குரிய மாணவர்களை இனங்காண்க.
2. அவர்கள் கற்றலில் இடர்ப்பாட்டைக் காட்டும் விடயப்பரப்பை / பரப்புக்களை இனங்காண்க.
3. ஆய்ந்தறி சோதனையை நடாத்துவதற்குப் பொருத்தமான ஒரு நேரத்தை தெரிவு செய்து கொள்க.
4. ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் முதலாவது வினாவில் ஆரம்பித்துப் படிப்படியாக விடையளித்துச் செல்லுமாறு மாணவருக்கு அறிவுறுத்துக.
5. இச்சோதனையின் முக்கியத்துவத்தை மாணவர் விளங்கிக் கொள்ள வகை செய்க. அதற்கமைய விடையளிக்கும் போது கலந்துரையாடுவதையும், ஏனையோரின் விடைகளைப் பார்த்து எழுதுவதையும் தவிர்த்துக் கொள்வதன் அவசியத்தையும் உணர்த்துக.
6. ஒரு வினாப்பத்திரத்திற்கு ஏறத்தாழ 40 நிமிட நேரம் செலவாகுமென எதிர்பார்க்கப் படுகின்றது.
7. மாணவரது விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் போது, விடைப்பத்திரத்துடன் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுக.

8. யாதேனும் வினா இலக்கத்தின் கீழ்க் கோவைப்படுத்தப்படுத்தப்பட்டுள்ள எல்லா உருப்படிகளுக்கும் சரியாக விடையளித்துள்ளாராயின் மாத்திரம், அப்பாட விடயத்தில் பாண்டித்தியம் பெற்றுள்ளார் எனக் கருதுக. வினாப்பத்திரத்தில் உள்ள மூன்று வினாக்களுள் ஒரு வினாவுக்கு மாத்திரமே சரியாக விடையளித்துள்ளாரெனின் அதனை ஓர் எழுமாறான நிகழ்வு எனக் கருதுக.

9. விடைகளை மதிப்பீடு செய்யும் போது மேலே கணிதத் திறன் மதிப்பீட்டின் போது கவனத்திற்கொள்ள வேண்டிய காரணிகள் எனும் தலைப்பின் கீழே தரப்பட்டுள்ள விடயங்கள் குறித்துச் கவனஞ் செலுத்துக. ( செம்மை, துலங்கல் வேகம், விருத்தி மட்டம், பண்புத்தரம், அனுபவப்பரப்பு, சிந்தனை முறையும் அடைவும்)

10. ஆய்ந்தறி சோதனை மூலம் கற்றல் இடர்ப்பாட்டுக்கு ஏதுவாகிய காரணங்களை இனங்கண்டு பொருத்தமான பரிகார வேலைத்திட்டங்களைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துக.

## பரிகார வேலைகளைத் திட்டமிடும் போது கவனத்திற்கொள்ள வேண்டிய காரணிகள்:

i. விடைத்தாள்களை மதிப்பீடு செய்து, புள்ளிகளைப் பகுப்பாய்வு செய்து மாணவனின் கற்றல் இடர்ப்பாடுகளுக்கு ஏதுவாகியுள்ள விடயங்களைக் குறிப்பாக இனங்கண்டு கொள்க. அவ்விடயங்கள் குறித்து மாணவர்களுடன் நேர்காணல் நடத்தி அவ்விடயங்களை ஆழமாகக் கற்றாய்ந்து இயன்ற அளவுக்கு தனித்தனி மாணவருடன் கலந்துரையாடலை நடத்துக.

ii. மெல்லக் கற்பதற்குக் காரணமாக அமைந்த பிற காரணிகளைத் தேடியாராய்க. போதுமான அளவு பயிற்சி பெறாமை, பாடசாலைக்கு வருகை தராமை, சுகவீனமும் சுகாதார நிலையும், தவறான நடத்தைகள் போன்றவை குறித்துக் கவனஞ் செலுத்துக.

iii. மாணவரது விடைகளின் செம்மை, தரம் ஆகியன குறித்துக் கவனஞ் செலுத்தி அவை தொடர்பாக அவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குக.

iv. மெல்லக் கற்கும் மாணவரது கற்றல் வேகத்தை அதிகரிப்பதற்காக, அவர்களை மீண்டும் மீண்டும் பயிற்சிகளில் ஈடுபடச் செய்க.

v. பரிகார வேலைகளைத் திட்டமிடும் போது விரிவுரைமுறையை இயன்ற அளவுக்குத் தவிர்த்துக்கொள்க. குழுச்செயற்பாடுகள், களிப்பூட்டும் விளையாட்டுக்கள் போன்றவற்றை இயன்ற அளவுக்குத் திட்டமிட்டு கற்றல் செயன்முறையை நடைமுறைப்படுத்துக.

vi. மாணவர்களுக்கிடையே வினைத்திறனான கலந்துரையாடல்களும் இடைத்தொழிற்பாடு களும் நிகழும் வகையில் கற்றல்-கற்பித்தல் செயன்முறையைத் திட்டமிடுக.

vii. கருத்து நிலையான எண்ணக்கருக்களை இயன்ற அளவுக்கு உண்மைப்பொருள் சார்ந்த அனுபவங்கள் மூலம் உறுதிப்படுத்துக.

viii. பரிகாரக் கற்றற் செயன்முறைக்காக சரியான, பொருத்தமான கற்றற் சாதனங்களைப் பயன்படுத்துக.

ix. மாணவரது முன்னேற்றம் தொடர்பாக ஒழுங்குமுறையாகப் பதிவுகளைப் பேணுக.

x. மாணவரது கற்றல் இடரப்பாடுகளைத் தவிர்த்து அவர்களை பாடத்திட்டத்தின் குறித்த பாடவிடயங்களின் பால் வழிப்படுத்துக.

**ஆய்ந்தறிகை மூலம் மேம்பட்ட தரமான கற்றலைக் காட்டும் ஒழுங்கு முறை:**




மேற்படி ஒழுங்குமுறையின்படி மாணவர் தவறுவிடும் மற்றும் இடர்ப்பாட்டைக் காட்டும் பரப்புக்களுக்கான ஆய்ந்தறி சோதனைகளைக் கட்டியெழுப்பி, மாணவரது திறன்களைப் பகுப்பாய்வு செய்யலாம். நாம் சோதனைகள் தயாரித்துள்ள பாடப்பரப்புக்களுக்கு மேலதிகமாக, ஏனைய பாடப்பரப்புகளிலும் ஆய்ந்தறி சோதனைகளைத் தயாரிக்க முயற்சி செய்க. தாம் தயாரித்து முன்வைத்துள்ள ஆய்ந்தறி சோதனைகள் தொடர்பான ஆக்கபூர்வமான பிரேரணை களையும் கருத்துக்களையும் எமக்கு அறிவிப்பீர்களாயின் நன்றியுடையவர்களாவோம்.

கணிதத்தில் சித்திபெறத் தவறி, உயர் கல்வி வாய்ப்பை இழக்கும் அவல நிலையை எதிர்நோக்கும் பல்லாயிரக்கணக்கான இலங்கைப் பிள்ளைகளை இலக்காகக் கொண்டே இந்த ஆய்ந்தறிகைச் சோதனைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவற்றை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நம் நாட்டுப் பிள்ளைச் செல்வங்களின் அறிவுக் கண்களைத் திறக்கலாம் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

[பொதுவான மதிப்பீட்டின் போது மாணவரது அடைவு கணிப்பீடு (assess) செய்யப்படுவதோடு ஆய்ந்தறிகை சோதனையின் போது மாணவரது திறன்கள் பகுப்பாய்வு ( analysis ) செய்யப்படும்.]

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர) பெறுபேறு
மேம்பாட்டுச் செயற்றிட்டத் தலைவர்.

# பரிகாரக் கற்பித்தல்

வகுப்பறையில் உள்ள மாணவர்களைக் கருதுகையில், அவர்களுள் பெரும்பாலானோர் கற்றல் இடரப்பாடுகளைக் கொண்டுள்ளமையை அறியமுடிகின்றது. நினைவாற்றல் குறைவு, கற்றலின்பால் ஊக்கம் பெறுவதிலுள்ள குறைபாடுகள், கற்றலில் கவனஞ் செலுத்துதல் சார்ந்த குறைபாடுகள், பிரச்சினை தீர்த்தற் குறைபாடுகள், வெவ்வேறு எண்ணக்கருக்களைக் கிரகிப்பதிலுள்ள குறைபாடுகள், கற்ற அறிவை உரிய சந்தர்பங்களில் சரியாகப் பயன்படுத்து வதிலுள்ள குறைபாடுகள் போன்றவை மாணவர்கள் காட்டும் அவ்வாறான சில இடர்ப்பாடு களாகும்.

மாணவர்களிடத்தில் பலவகைப்பட்ட கற்றல் இடர்ப்பாடுகள் காணப்படுவதோடு, பல்வேறு திறன்களும், வெவ்வேறு கற்றல் முறைகளும் அவர்களது வசமுள்ளன. சில பிள்ளைகள் கட்புல ஊடகத்தைப் பயன்படுத்திக் கற்பதில் திறமைகாட்டுவர்; மற்றும் சில செவிப்புல ஊடகத்தைப் பயன்படுத்திக் கற்பதில் ஆர்வம் காட்டுவர்; மற்றும் சில மாணவர்கள் செயன்முறை அனுபவங்கள் மூலம் கற்பதையே பெரிதும் விரும்புவர்.

அதற்கமைய மாணவரிடத்தே காணப்படும் திறன்கள் மற்றும் கற்றல் முறைகளில் கவனஞ் செலுத்தி சிலரிடத்தே காணப்படும் கற்றல் இடர்ப்பாடுகளை இழிவாக்குவதை நோக்காகக் கொண்டு அவர்களிடத்தே கற்றல் சூழலில் அவர்களுக்குப் பொருத்தமான கற்றல் - கற்பித்தற் சாதனங்களைப் பயன்படுத்தி அவர்களது கற்றலின் தரத்தை மேம்படுத்துவதே பரிகாரக் கற்பித்தல் மூலம் எதிர்பார்க்கப்படுவதாகும். ஆய்ந்தறி சோதனை மூலம் பெறும் தகவல்களே பரிகாரக் கற்றல்-கற்பித்தலின் தொடக்கப் புள்ளியாகும்.

மாணவரது கற்றல் இடர்ப்பாடுகளை இழிவாக்கும் நோக்குடன் செய்யப்படும் பரிகாரக் கற்பித்தலின் போது கவனத்திற் கொள்ள வேண்டிய பல விடயங்கள் உள்ளன. ஆசிரியரது ஆயத்தம், வெவ்வேறு கற்றற் செயற்பாடுகளைப் பயன்படுத்தல், பொருத்தமான கற்றல் சந்தர்ப்பங்களை ஒழுங்கு செய்தல், வெவ்வேறு கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்துதல், தகவல்களைத் தெளிவாக வழங்குதல், பிரதான விடயங்களைப் பொழிப்பாக்கி முன்வைத்தல், கற்றலின் பால் விருப்பத்தையும் ஆர்வத்தையும் மேம்படுத்துதல், வகுப்பறைச் செயற்பாடுகளின் போது மாணவரது ஈடுபாட்டை அதிகரித்தல், கற்றற் செயன்முறையின் பால் கூடுதலான கவனம் செலுத்துதல், அந்தந்த மாணவரின் திறன்களைக் கருத்திற் கொள்ளல் போன்றவை அவற்றுள் அடங்கும்.

## இவ்விடயங்களை விரிவாக நோக்குவோம்.

### ஆசிரியரது ஆயத்தம்

பரிகாரக் கற்பித்தலை நடத்தும் ஆசிரியர் தனது பாடத்தைத் தயாரிக்க முன்னர், மாணவரது கற்றல் இடர்ப்பாடுகளை இயன்றளவு விரைவாக இனங்கண்டு கொள்வது அவசியமாகும். அதற்காக ஆய்ந்தறி சோதனையொன்றினை நடத்தலாம். அதற்கமைய தமது மாணவருக்கு மிகப் பொருத்தமானவாறு கற்பித்தல் திட்டமொன்றினைத் தயாரித்துக் கொள்ளலாம் அல்லது கற்ற, பிரதான விடயங்களை வாய்மொழி மூலம் அல்லது எழுத்து மூலம் வகுப்பறையில் முன்வைக்குமாறு மாணவரை வழிப்படுத்தலாம். அது மாணவரது ஞாபகத்தை உறுதிப்படுத்தத் துணையாகும்.

**கற்றலில் விருப்பத்தையும் ஆர்வத்தையும் மேம்படுத்தல்.**

வகுப்பறைக் கற்றற் சந்தர்ப்பங்களின் போது கற்றல் இடர்ப்பாடுகள் காரணமாக, கற்றல் தொடர்பாக அவர்கள் காட்டும் ஆர்வமும், விருப்பமும் படிப்படியாகக் குறைவடையும் எனவே கலைத்திட்டத்தை மாணவரது தேவைகளுடன் தொடர்புபடுத்திக் கொள்வதில் ஆசிரியர் கவனஞ் செலுத்துதல் வேண்டும். மாணவரது விருப்பத்தையும் கருத்திற்கொண்டு சுவாரசியமான செயற்பாடுகளையும் ஆசிரியர் திட்டமிட்டுக் கொள்வது பயன்மிக்கதாகும்.

**வகுப்பறைச் செயற்பாடுகளின் போது மாணவரது ஈடுபாட்டை அதிகரித்தல்.**

கற்றல் இடர்ப்பாடுடைய பிள்ளைகள் பெரும்பாலும் சுயகற்றலில் ஈடுபடுவதில் ஆர்வம் குறைந்தவராகவும் ஓரளவுக்கு அமைதி விரும்பிகளாகவும் இருப்பர். அவர்கள் வினாக்கேட்பதில் அவர்களது கருத்துக்களை முன்வைப்பதிலும் பின்னிப்பர். எனவே அவர்களது செயல்ரீதியான ஈடுபாட்டைப் பெறுவதற்காக ஆசிரியர் அவர்களைத் தூண்டித் தைரியமூட்டுவது அவசியமாகும்.

**கற்றல் - கற்பித்தற் செயன்முறையின்பால் கூடுதலாக கவனம் செலுத்துதல்.**

கற்பித்தலின் போது அறிவைக் கடத்துதல் தொடர்பாக மாத்திரம் கவனஞ் செலுத்துவது போதுமானதல்ல. கற்றற் செயன்முறையின் போது மாணவருக்குப் பயன்தரத்தக்க செயல்கள் இடம்பெறுகின்றனவா என்பது குறித்துக் கவனஞ் செலுத்துதல் வேண்டும். மேலும் தாம் கற்றவை தொடர்பாகச் சிந்திப்பதற்கும் செயல்ரீதியில் கையாண்டு பார்ப்பதற்கும் பிரச்சினை தீர்ப்பதற்கும் சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். மேலும் ஆசிரியர் அச்சந்தர்ப்பங்களைக் கவனமாக அவதானித்து அவர்களது திறன்களுக்கு அமைய தேவையான உதவிகளைச் செய்து பின்னூட்டல் வழங்குதல் வேண்டும். மேலும் அவர்களுக்கு தைரியமூட்டு வதும் அவசியமாகும்.

**பல்வேறு கற்றல் செயற்பாடுகளைப் பயன்படுத்துதல்.**

மாணவர்கள் கற்றலின் போது பல்வேறு இயல்புகளைக் காட்டுகின்றமையால் அவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர் பல்வேறு கற்றற் செயற்பாடுகளை ஒழுங்கு செய்வது அவசியமாகும். இதற்கமைய மாணவரிடத்தே காணப்படும் பல்வேறு திறமைகளையும் ஆற்றல்களையும் மேலும் விருத்தி செய்யலாம். இதற்காக ஒரு நீண்ட செயற்பாட்டை ஒழுங்கு செய்வதற்குப் பதிலாக எளிமையான ஒரு செயற்பாட்டுத்தொடரை ஒழுங்கு செய்வதன் மூலம் மாணவருக்குத் தேவையான அறிவையும் திறன்களையும் வழங்குவதே முக்கியமானதாகும்.

**பொருத்தமான கற்றல் சந்தர்ப்பங்களை ஒழுங்கு செய்தல்.**

பரிகாரக் கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்கள் அதற்காகப் பொருத்தமான கற்றல் சந்தர்ப்பங்களை ஒழுங்குசெய்து கொள்வது அவசியமாகும். உதாரணமாக, கணிதப் பாடத்துக்காகப் பொருத்தமான விளையாட்டுக்களை ஒழுங்கு செய்யலாம். ஆங்கில மொழிப்பாடத்திற்காக மொழிச் சூழலொன்று கட்டியெழுப்பப்படுவதை மற்றுமோர் உதாரணமாகக் குறிப்பிடலாம்.

**கற்பித்தல் முறைகள்**

ஆசிரியர் கருத்துநிலையான எண்ணக்கருக்களை விளக்கும் போது மாணவரது கற்றல் திறன்களுக்கேற்ப உண்மைப்பொருளின் வழியே கருத்துநிலையான உதாரணங்களைப் பயன்படுத்தி, எளிமையான படிமுறைகளின் வழியே அதனைச் செய்தல் வேண்டும். ஆசிரியர் தமது மாணவரைச் செயல்ரீதியில் ஈடுபாடு கொள்ளச் செய்வதற்காகப் போதுமான அளவுக்கு கற்றல் சாதனங்களைப் பயன்படுத்துவதும் விளையாட்டுக்களையும் செயற்பாடுகளையும் பயன்படுத்துவதும் முக்கியமானது. மேலும் பிரதான விடயங்களை விளக்கும் போது தகவல் தொடர்பாடல் தொழினுட்பத்தையும் வசமுள்ள ஏனைய சகல வளங்களையும் பயன்படுத்தி மாணவர்கள் விடயங்களை இலகுவாக விளங்கிக் கொள்ள வகைசெய்தல் வேண்டும்.

**தகவல்களை தெளிவாக வழங்குதல்.**

கற்றலில் இடர்ப்படும் பெரும்பாலான மாணவரிடத்தே எழுத்து மொழி மூலம் விளக்கம் பெறும் ஆற்றல் குறைவான மட்டத்திலேயே காணப்படுகின்றது. எனவே ஆசிரியர் தகவல்களை எளிமையான வடிவத்தில் தெளிவாக வழங்குவதன் மூலம் மாணவர்கள் விடயத்தினைத் தவறாகப் புரிந்துகொள்ளும் நிலையைத் தவிர்க்கலாம். மேலும் கற்றற் செயற்பாடுகளின் போது அதன்படி முறைகளை எளிமையான வகையில் விளக்குதல் வேண்டும். ஆசிரியர் மாணவரது தேவைகளின் பேரில் அச்செயற்பாடுகளின் படிமுறைகளை மீண்டும் மீண்டும் விளக்குவதும் பயனுடையதாகும்.

**பிரதானவிடயங்களைப் பொழிப்பாக்கி முன்வைத்தல்.**

பாடத்தின் முடிவில் ஆசிரியர் தாம் நடத்திய பாடத்தின் பிரதான விடயங்களை மீண்டும் நினைவூட்டி அவ்விடயங்களைக் கரும்பலகையில் குறிப்பிடுதல் வேண்டும். கட்புல, செவிப்புல சாதனங்களின் துணையுடன் கற்ற விடயங்களை மீள நினைவு கூர்வதற்கு அது துணையாக அமையும். மேலும் மாணவர்கள் கற்ற விடயங்களை அவர்களது நாளாந்த வாழ்க்கை அனுபவங்களுடன் தொடர்புபடுத்திக்கொள்ளுமாறு மாணவரை வழிப்படுத்துவதும் அவசிய மாகும்.

**தரம் 6 - 11 கணித பாட**
**செயற்றிட்டக் குழு**

# கலைத்திட்டக் குழு

**ஆலோசனை:**

**பேராசிரியர் டபிள்யு. எம். அபேரத்ன பண்டார**
பணிப்பாளர் நாயகம்,
தேசிய கல்வி நிறுவகம்.

**எம். எவ். எஸ். பீ. ஜயவர்தன**
பிரதிப் பணிப்பாளர் நாயகம்,
விஞ்ஞான தொழினுட்பப் பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்.

**மேற்பார்வை:**

**கே. ரஞ்சித் பத்மசிறி**
பணிப்பாளர்,
கணிதத்துறை,
தேசிய கல்வி நிறுவகம்.

**திட்டமிடலும் இணைப்பாக்கமும்:**

**ஜீ. எல். கருணாரத்ன**
சிரேஷ்ட கல்வியியலாளர்
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பெறுபேறு
மேம்பாட்டுச் செயற்றிட்ட தலைவர்,
கணிதத்துறை,
தேசிய கல்வி நிறுவகம்.

**தமிழ்மொழி மூல இணைப்பாக்கம்:**

**எஸ். இராஜேந்திரம்**
விரிவுரையாளர்,
தேசிய கல்வி நிறுவகம்.

**வெளிவாரி வளப்பங்களிப்பு:**

| | |
|---|---|
| திரு.எச்.எம்.ஏ. ஜயசேன | ஆசிரிய ஆலோசகர் (ஓய்வு பெற்ற) |
| திரு.வை.வீ.ஆர். வித்தாரம | ஆசிரிய ஆலோசகர்<br>வலயக் கல்வி அலுவலகம்,<br>தெகியோவிட்ட |
| திரு. என்.ஜீ. செனவிரத்ன | ஆசிரிய ஆலோசகர்<br>வலயக் கல்வி அலுவலகம்,<br>தெகியோவிட்ட |
| திரு.ஆர்.பீ.டீ.சீ. ஜயசிங்ஹ | ஆசிரிய ஆலோசகர்<br>வலயக் கல்வி அலுவலகம்,<br>தெகியோவிட்ட |
| திரு. டபிள்யூ. ரத்னாயக்க | செயற்றிட்ட அதிகாரி (ஓய்வு பெற்ற) |
| திரு. சம்பத் லொக்குமுதலி | ஆசிரியர்<br>ஜனாதிபதி வித்தியாலயம், மகரகம |
| திருமதி.ஜீ.எச்.எஸ்.ரஞ்சினி த சில்வா | ஆசிரியர்<br>தர்மபால வித்தியாலம், பன்னிப்பிட்டிய |
| திருமதி எம்.எம்.எஸ்.கே. மாரசிங்க | ஆசிரிய ஆலோசகர்<br>வலயக் கல்வி அலுவலகம்,<br>வத்தேகம. |
| திருமதி. டபிள்யூ. எம்.பீ. வீரசேகர | ஆசிரிய ஆலோசகர்<br>வலயக் கல்வி அலுவலகம்,<br>வத்தேகம. |
| திரு. என். ரகுநாதன் | ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர்<br>(கணிதம்) |
| திரு. ஏ. எஸ். மஹ்ரூப் | ஓய்வுபெற்ற அதிபர்,<br>ஆசிரிய ஆலோசகர் (கணிதம்) |

| | |
|---|---|
| **கணனி பக்க அமைப்பு:** | திரு. தி. கிரிநிவாசன்<br>ஆசிரிய ஆலோசகர்,<br>வலயக் கல்வி அலுவலகம், கல்முனை. |
| **மொழிச் செம்மையாக்கம்:** | திரு. என். ரகுநாதன்<br>ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் |
| **அட்டைப் படம்:** | தேசிய கல்வி நிறுவகம் |

# பொருளடக்கம்

## பரிகாரக் கற்பித்தல்


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | **அட்சரகணிதக் கோவைகள் I** | **1 - 13** |
| 1.1. | விடயப் பகுப்பாய்வு | |
| 1.2 | வினாப்பத்திரம் | |
| 1.3 | விடைகளும் அறிவுறுத்தல்களும் | |
| 2 | **அட்சரகணிதக் கோவைகள் - II** | **14 - 23** |
| 2.1 | விடயப் பகுப்பாய்வு | |
| 2.2 | வினாப்பத்திரம் | |
| 2.3 | விடைகளும் அறிவுறுத்தல்களும் | |
| 3 | **காரணிகள் - I** | **24 - 35** |
| 3.1 | விடயப் பகுப்பாய்வு | |
| 3.2 | வினாப்பத்திரம் | |
| 3.3 | விடைகளும் அறிவுறுத்தல்களும் | |
| 4 | **காரணிகள் - II** | **36 - 46** |
| 4.1 | விடயப் பகுப்பாய்வு | |
| 4.2 | வினாப்பத்திரம் | |
| 4.3 | விடைகளும் அறிவுறுத்தல்களும் | |
| 5 | **எளிய சமன்பாடுகள்** | **47 - 62** |
| 5.1 | விடயப் பகுப்பாய்வு | |
| 5.2 | வினாப்பத்திரம் | |
| 5.3 | விடைகளும் அறிவுறுத்தல்களும் | |
| 6 | **வரைபுகள் - I** | **63 - 74** |
| 6.1 | விடயப் பகுப்பாய்வு | |
| 6.2 | வினாப்பத்திரம் | |
| 6.3 | விடைகளும் அறிவுறுத்தல்களும் | |
| 6 | **வரைபுகள் - II** | **75 - 84** |
| 6.1 | விடயப் பகுப்பாய்வு | |
| 6.2 | வினாப்பத்திரம் | |
| 6.3 | விடைகளும் அறிவுறுத்தல்களும் | |
| 6 | **வரைபுகள் - III** | **85 - 94** |
| 6.1 | விடயப் பகுப்பாய்வு | |
| 6.2 | வினாப்பத்திரம் | |
| 6.3 | விடைகளும் அறிவுறுத்தல்களும் | |
| 6 | **வரைபுகள் - IV** | **94 - 99** |
| 6.1 | விடயப் பகுப்பாய்வு | |
| 6.2 | வினாப்பத்திரம் | |
| 6.3 | விடைகளும் அறிவுறுத்தல்களும் | |

ஆய்ந்தறி சோதனை
அட்சரகணிதம்

# 1. அட்சரகணிதக் கோவைகள் - I & II

(i) விடயப் பகுப்பாய்வு

(ii) வினாப்பத்திரம்

(iii) விடைகளும் அறிவுறுத்தல்களும்

# 1. அட்சரகணிதக் கோவைகள் - I & II

## விடயப் பகுப்பாய்வு

1.1 அட்சரக் குறியீடுகளும் அட்சரகணித உறுப்புக்களும்
1.2 அட்சரகணித உறுப்பின் குணகம்
1.3 அட்சரகணித கோவைகள்
1.4 நிகர்த்த உறுப்புகளின் கூட்டல்
1.5 அட்சரகணிதக் கோவையினை எண் ஒன்றினால் அல்லது அட்சரகணித உறுப்பினால் பெருக்குதல்.
1.6 பிரதியிடுதல்

# ஆய்ந்தறி சோதனை
# 1. அட்சரகணிதக் கோவைகள் - I
## விடயப் பகுப்பாய்வு

| வினா இல. | குறிக்கோள் இலக்கம் | குறிக்கோள் |
|---|---|---|
| | 1.1 | **அட்சரக் குறியீடுகளும் அட்சரகணித உறுப்புக்களும்** |
| 1 | 1.1.1 | தரப்பட்ட எண்கள் மற்றும் அட்சரக் குறியீடுகளின் பட்டியலில் இருந்து அட்சரக் குறியீடுகள் மற்றும் எண்களை தெரிவு செய்து வெவ்வேறாக அட்டவணையில் காட்டுவார். |
| 2 | 1.1.2 | ஒரே குறியீட்டினை மீண்டும் மீண்டும் கூட்டுவதன் மூலம் பெறப்படும் பெறுமானம், அந்த அட்சரக் குறியீட்டினை, அதனைக் கூட்டிய தடவைகளின் எணணிக்கையுடன் பெருக்கல் குறியீட்டினால் காட்டுவார். |
| 3 | 1.1.3 | அட்சரக் குறியீடும் எண்ணென்றும் பெருக்கல் குறியீட்டினால் தொடர்பு பட்டிருப்பின் அவற்றை பெருக்கல் குறியீடு இன்றி அட்சரகணித உறுப்பாக எழுதிக்காட்டுவார். |
| 4. | 1.1.4 | அட்சரகணித உறுப்பில் உள்ள எண் மற்றும் அட்சரக் குறியீட்டினை பெருக்கலாக எழுதிக்காட்டுவார். |
| 5 | 1.1.5 | அட்சரகணித உறுப்பானது எப்போதும் அட்சரக் குறியீட்டினை கொண்டிருத்தல் வேண்டும் எனக் கூறுவார். |
| | 1.2 | **அட்சரகணித உறுப்பின் குணகம்** |
| 6 | 1.2.1 | அட்சரகணித உறுப்பின் குணகம், அட்சரக் குறியீடு கொடுக்கப்பட் டுள்ள எண் என இனங்காண்பார். |
| 7 | 1.2.2 | அட்சரக் குறியீடு மட்டும் உள்ள அட்சரகணித உறுப்பின் குணகம் 1 என்பதை இனங் காண்பார். |
| 8 | 1.2.3 | குணகம் நேர் ஆகவுள்ள அட்சரகணித உறுப்பில் அதன் குணகத்தை எழுதிக் காட்டுவார். |
| 9 | 1.2.4 | குணகம் மறை ஆகவுள்ள அட்சரகணித உறுப்பில் அதன் குணகத்தை எழுதிக் காட்டுவார். |
| 10 | 1.2.5 | குணகம் பின்னமாக உள்ள அட்சரகணித உறுப்பில் அதன் குணகத்தை எழுதிக்காட்டுவார். |

| வினா இல. | குறிக்கோள் இலக்கம் | குறிக்கோள் |
|---|---|---|
| | **1.3** | **அட்சரகணித கோவைகள்** |
| 11 | 1.3.1 | ஒரு அட்சரகணித உறுப்பு இன்னுமொரு அட்சரகணித உறுப்புடன் அல்லது ஓர் எண்ணுடன் கூட்டல் குறி மூலம் அல்லது கழித்தல் குறி மூலம் தொடர்புபடுத்தப்பட்டு அட்சரகணிதக் கோவை பெறப்படுகிறது என்பதைக் கூறுவார். |
| 12 | 1.3.2 | அட்சரகணிதக் கோவைகள் தொடர்பான கூற்றுக்களில் பிழையான கூற்றினைத் தெரிவு செய்வார். |
| 13 | 1.3.3 | தரப்பட்ட அட்சரகணித கோவைகளில் ஓருறுப்பு, ஈருறுப்பு, மூவுறுப்பு கொண்ட கோவைகளைத் தெரிவு செய்வார். |
| 14 | 1.3.4 | ஓருறுப்பு, ஈருறுப்பு, மூவுறுப்பு அட்சரகணிதக் கோவைகளை இனங் காண்பார். |
| 15 | 1.3.5 | தரப்பட்ட அட்சரகணிதக் கோவைகளில் ஓருறுப்பு, ஈறுப்பு, மூவுறுப்பு கோவைகளைத் தெரிவு செய்வார். |
| 16 | 1.3.6 | தரப்பட்ட அட்சரகணிதக் கோவைகளில் ஒரு தெரியாக் கணியத்தை மாத்திரம் கொண்ட அட்சரகணித கோவைகளைத் தெரிவு செய்வார். |
| 17 | 1.3.7 | தரப்பட்ட அட்சரகணிதக் கோவைகளில் இரண்டு தெரியாக் கணியங் களைக் கொண்ட அட்சரகணித கோவைகளைத் தெரிவு செய்வார். |
| 18 | 1.3.8 | ஒரு கணிதச் செய்கையினை மட்டும் கொண்ட பாய்ச்சல் கோட்டுப் படத்தின் இறுதித் தொடர்பினை எழுதிக் காட்டுவார். |
| 19 | 1.3.9 | பெருக்கல் மற்றும் வகுத்தல் கணிதத் செய்கைகளை மாத்திரம் கொண்ட பாய்ச்சல் கோட்டுப் படத்தின் இறுதித் தொடர்பினை எழுதிக் காட்டுவார். |
| 20 | 1.3.10 | கணிதச் செய்கைகள் இரண்டினை உள்ளடக்கிய அட்சரகணித கோவைகளை வகைகுறிக்கும் பாய்ச்சல் கோட்டுப் படத்தின் இறுதித் தொடர்பினை எழுதிக் காட்டுவார். |
| 21 | 1.3.11 | அட்சரகணித உறுப்பொன்றினதும் எண்ணொன்றினதும் கூட்டலை அல்லது கழித்தலைக் கொண்ட கூற்றினை அட்சரகணிதக் கோவை யாக எழுதுவார். |
| 22 | 1.3.12 | அட்சரகணித உறுப்பு மற்றும் எண்ணொன்றினை பெருக்குவதன் மூலம் தொடர்புடைய வாக்கிய வடிவிலான கூற்றினை அட்சரகணிதக் கோவையாக எழுதிக் காட்டுவார். |
| 23 | 1.3.13 | அட்சரகணித உறுப்பு மற்றும் எண்ணொன்றினை வகுப்பதன் மூலம் தொடர்புபடுத்தும் வாக்கிய வடிவிலான கூற்றினை அட்சரகணிதக் கோவையாக எழுதிக் காட்டுவார். |

| வினா இல. | குறிக்கோள் இலக்கம் | குறிக்கோள் |
|---|---|---|
| 24 | 1.3.14 | அட்சரகணித உறுப்பு மற்றும் எண் இரண்டினையும் பெருக்குதல் மற்றும் கூட்டுதல் அல்லது கழித்தல் போன்ற கணிதச் செய்கைகளின் மூலம் தொடர்புபடுத்தும் வாக்கிய வடிவிலான கூற்றினை அட்சர கணிதக் கோவையாக எழுதிக் காட்டுவார். |
| 25 | 1.3.15 | அட்சரகணித உறுப்பு மற்றும் மூன்று எண்களை பெருக்குதல் அல்லது வகுத்தல் மற்றும் கூட்டுதல் அல்லது கழித்தல் போன்ற கணிதச் செய்கைகளையும் அடைப்புக் குறிகளையும் பயன்படுத்தி தொடர்பு படுத்தும் அட்சரகணிதக் கோவையை கட்டியெழுப்புவார். |
| 26 | 1.3.16 | அட்சரகணித உறுப்பு மற்றும் மூன்று எண்கள் சிலவற்றை கூட்டுதல், கழித்தல், பெருக்குதல் மற்றும் வகுத்தல் போன்ற கணிதச் செய்கைகள் நான்கிலும் மேற்படா வண்ணம் சேர்க்கப்பட்ட அட்சர கணிதக் கோவையை சொற்களில் எழுதிக்காட்டுவார். |

## ஆய்ந்தறி சோதனை
# 1. அட்சரகணிதக் கோவைகள் - I
## வினாப்பத்திரம்

1. கீழே தரப்பட்டுள்ள பட்டியலில் அட்சரங்கள் மற்றும் எண்களை தெரிவு செய்து அட்டவணையில் காட்டுக.

$5, \quad x, \quad y, \quad 100, \; 18, \quad l\,, \; 2x, \; 5\text{m}\,, \; 1, \; 62, \; \text{q}$

| | |
|---|---|
| அட்சரங்கள் | |
| எண்கள் | |

2. $5+5+5=15$ ஆகும். இது மூன்று தடவைகள் 5 ஐக் கூட்டுதல் எனக் கருதும் போது $3\times 5=15$ என எழுதுவதன் மூலம் கீழே தரப்பட்டள்ள அட்சரங்களை எண் ஒன்றினால் பெருக்கும் முறையினைக் காட்டுக.

(i) $x + x + x$ = ...... $\times\, x$
(ii) $a + a + a$ = ...... $\times$ ......
(iii) $p + p + p + p + p + p$ = ...... $\times$ ......

3. அட்சரம் ஒன்றினை எண் ஒன்றுடன் பெருக்கல் குறியுடன் தொடர்புபடுத்தும்போது பெருக்கல் குறியீடு இன்றி எண்ணினை முதலிலும் அட்சரக்கணிதக் குறியீட்டினை அடுத்ததாகவும் அமையும் வண்ணம் எழுதப்படும்.

(i) $4 \times \text{p}$ = ......
(ii) $10 \times x$ = ......
(iii) $3 \times l$ = ......

4. கீழே காட்டப்பட்டுள்ள அட்சரகணித உறுப்புகளை பெருக்கல் குறியீட்டினை உட்படுத்தி மீண்டும் எழுதுக.

(i) $2a$ = ...........
(ii) $15d$ = ...........
(iii) $8\,y$ = ...........

**கீழே வினாக்கள் 5, 6, 7 இல் தரப்பட்டுள்ள கூற்றுக்களுக்கு பொருத்தமான சரியான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

5. அட்சரகணித உறுப்பில்.
   (i) எப்போதும் அட்சரம் இருத்தல் வேண்டும்.
   (ii) அட்சரம் இருப்பது அவசியமன்று.
   (iii) எப்போதும் அட்சரமும் எண்ணும் கூட்டலாகக் காணப்படும்.

6. அட்சரகணித உறுப்பில் குணகம் ஆனது,
   (i) எப்போதும் 1 ஆகும்.
   (ii) அட்சரம் பெருக்கப்பட்டுள்ள பெறுமானமாகும்.
   (iii) அட்சரத்துடன் கூட்டப்பட்டுள்ள பெறுமானமாகும்.

7. P இன் குணகமாவது,
   (i) P
   (ii) 0
   (iii) 1

8. கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையை நிரப்புக.

| | அட்சரகணித உறுப்பு | அட்சரத்தின் குணகம் |
|---|---|---|
| (i) | 5m | |
| (ii) | 10 p | |
| (iii) | 4$y$ | |

9. அட்டவணையை நிரப்புக.

| | அட்சரகணித உறுப்பு | அட்சரத்தின் குணகம் |
|---|---|---|
| (i) | - 2x | |
| (ii) | -3y | |
| (iii) | -p | |

10. அட்டவணையை நிரப்புக.

| | அட்சரகணித உறுப்பு | அட்சரத்தின் குணகம் |
|---|---|---|
| (i) | $\frac{1}{2}x$ | .................... |
| (ii) | $\frac{2}{5}x$ | .................... |
| (iii) | $-\frac{1}{3}p$ | ..................... |

**கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் சரியான கூற்றினைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

11. அட்சரகணிதக் கோவை என்பது,
   - (i) அட்சரகணித உறுப்பு இன்னொரு அட்சரகணித உறுப்பொன்றுடன் அல்லது எண்ணுடன் கூட்டல் குறியீட்டால் தொடர்புபடுத்தப்படுவதன் மூலம் மட்டுமே கட்டியெழுப்பப்படும்.
   - (ii) அட்சரகணித உறுப்பு இன்னொரு அட்சரகணித உறுப்பொன்றுடன் அல்லது எண்ணுடன் கழித்தல் குறியீட்டால் தொடர்புபடுத்தப்படுவதன் மூலம் மட்டுமே கட்டியெழுப்பப்படும்.
   - (iii) அட்சரகணித உறுப்பு இன்னொரு அட்சரகணித உறுப்பொன்றுடன் அல்லது உறுப்புக்களுடன் அல்லது எண்ணுடன் கூட்டல் குறியீட்டால் அல்லது கழித்தல் குறியீட்டால் தொடர்புபடுத்தப்படுவதன் மூலம் கட்டியெழுப்பப்படும்.

12. கீழே தரப்பட்டுள்ள தரவுகளின் பிழையான தரவினை தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
   - (i) கூட்டல் குறியீட்டினால் அல்லது கழித்தல் குறியீட்டினால் அட்சரகணிதக் கோவைகளின் உறுப்புக்கள் வேறாக்கப்படும்.
   - (ii) பெருக்கல் குறியீட்டினால் அட்சரகணிதக் கோவைகளின் உறுப்பு வேறாக்கப்படும்.
   - (iii) $2x$ என்பது ஒரு உறுப்பினைக் கொண்ட அட்சரகணிதக் கோவையாகும்.

13. கீழே காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு அட்சரகணித கோவைகளை ஓருறுப்பு, ஈருறுப்பு, மூவுறுப்பு என்றவாறு தெரிவு செய்து சரியான கட்டத்தில் ‘√’ □□□□□□□□□□□□□□□ என அடையாளமிடுக.

| | அட்சரகணிதக் கோவை | ஓருறுப்பைக் கொண்ட அட்சரகணிதக் கோவை | ஈருறுப்பைக் கொண்ட அட்சரகணிதக் கோவை | மூவுறுப்புக்களைக் கொண்ட அட்சரகணிதக் கோவை |
|---|---|---|---|---|
| | $3a$ | √ | | |
| (i) | $5x + 3$ | | | |
| (ii) | a + b + c | | | |
| (iii) | mn | | | |
| (iv) | -3 + 8m | | | |
| (v) | k | | | |

14. கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் இடைவெளிக்குப் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) 2P எனும் அட்சரகணிதக் கோவைக்கு (ஒன்று / இரண்டு) உறுப்பு உண்டு. அவ்வாறான அட்சரகணிதக் கோவையானது (ஓருறுப்பு / ஈருறுப்பு) கோவையென அழைக்கப்படும்.

(ii) $5x + 3$ எனும் அட்சரகணிதக் கோவையில் (ஒன்று / இரண்டு / மூன்று) உறுப்பு உண்டு. அவ்வாறான அட்சரகணிதக் கோவையானது (ஓருறுப்பு / ஈருறுப்பு / மூவுறுப்பு) கோவையென அழைக்கப்படும்.

(iii) 3a + 4b + 3 எனும் அட்சரகணிதக் கோவையில் (ஒன்று / இரண்டு / மூன்று) உறுப்பு உண்டு. அவ்வாறான அட்சரகணிதக் கோவையானது (ஓருறுப்பு / ஈருறுப்பு / மூவுறுப்பு) கோவையென அழைக்கப்படும்.

15. கீழே காட்டப்பட்டுள்ள அட்சரகணிதக் கோவைகளை அவற்றில் உள்ள உறுப்புகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப தெரிவு செய்து கீழே அட்டவணையை நிரப்புக.

3p - 1, $2a + b + c$, 3k, $4x$ - 3y, $l$ - n, $x$- 5

$10x$, $2xy$, $2x + y$, $2 + x + y$, $abc$

| ஓருறுப்புக் கோவை | ஈருறுப்புக் கோவை | மூவுறுப்புக் கோவை |
|---|---|---|
| | | |

16. கீழே காட்டப்பட்டுள்ள அட்சரகணிதக் கோவைகளில் ஓர் தெரியாக் கணியத்தை மாத்திரம் கொண்ட அட்சரகணித கோவையினை தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) $x$, $x + y$, $5t$, $3mn$, $a + 4$

(ii) $2x - y$, $2p$, $3x + 2$, $2a + b$, $3xy$

(iii) $5a$, $3a + 4b$, $2x + 1$, $\frac{5}{x}$, $3a - 2$

17. கீழே காட்டப்பட்டுள்ள அட்சரகணிதக் கோவைகளில் இரண்டு தெரியாக் கணியங்களைக் கொண்ட அட்சரகணிதக் கோவையினை தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) $3x - p$, $4ab$, $2a + 3b$, $8x - 3y - 52$

(ii) $2x$, $x + y$, $mn + 3$, 2k - 3

(iii) $\frac{5}{x} + 2y$, $3a + 2b$, $4p$ - 2q, $2x$

18. கீழே காட்டப்பட்டுள்ள பாய்ச்சல் கோட்டுப் படங்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புக.




19. கீழே காட்டப்பட்டுள்ள பாய்ச்சல் கோட்டுப் படங்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புக.




20. கீழே காட்டப்பட்டுள்ள பாய்ச்சல் கோட்டுப் படங்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புக.




21. கீழே காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றுக்களுக்கும் பொருத்தமான அட்சரகணிதக் கோவையை எழுதுக.

(i) $x$ எனக் காட்டப்படும் பெறுமானத்திற்கு 5 ஐக் கூட்டுதல்.

(ii) a எனக் காட்டப்படும் பெறுமானத்திலிருந்து 2 ஐக் கழித்தல்.

(iii) p எனக் காட்டப்படும் பெறுமானத்திலிருந்து 1 ஐக் கழித்தல்.

22. கீழே காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றுக்களுக்கும் பொருத்தமான அட்சரகணிதக் கோவையை எழுதுக.

(i) $x$ எனக் காட்டப்படும் பெறுமானத்தை 5 ஆல் பெருக்கல்.

(ii) $a$ எனக் காட்டப்படும் பெறுமானத்தை மூன்றால் பெருக்கல்.

(iii) $p$ எனக் காட்டப்படும் பெறுமானத்தை 10 ஆல் பெருக்கல்.

23. கீழே காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றுக்கும் அட்சரகணித கோவையைக் கட்டியெழுப்புக.

(i) $x$ எனக் காட்டப்படும் பெறுமானத்தின் இரு மடங்கினை 5 ஆல் வகுத்தல்.

(ii) $a$ எனக் காட்டப்படும் பெறுமானத்தில் 5 இல் மூன்று பங்கு.

(iii) $p$ எனக் காட்டப்படும் பெறுமானத்தை 10 ஆல் வகுத்தல்.

24 கீழே காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றுக்கும் அட்சரகணித கோவையைக் கட்டியெழுப்புக.

(i) $x$ எனக் காட்டப்படும் பெறுமானத்தின் இரு மடங்கிற்கு 5 ஐக் கூட்டுதல்.

(ii) $a$ எனக் காட்டப்படும் பெறுமானம் 5 ஆல் பெருக்கப்பட்டு 2 ஐக் கழித்தல்.

(iii) $p$ எனக் காட்டப்படும் பெறுமானம் மூன்றால் வகுக்கப்பட்டு 2 ஐக் கழித்தல்.

25. கீழே காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றுக்கும் அட்சரகணித கோவையைக் கட்டியெழுப்புக.

(i) $x$ எனக் காட்டப்படும் எண்ணின் இரு மடங்கிற்கு 5 ஐக் கூட்டி பெறப்படும் விடையை 5 ஆல் பெருக்குக.

(ii) $a$ எனக் காட்டப்படும் எண்ணின் மும்மடங்குடன் 2 ஐக் கழித்து பெறப்படும் விடையை 5 ஆல் பெருக்குக.

(iii) $P$ எனக் காட்டப்படும் எண்ணின் மூன்றிலொரு பங்கிற்கு ஒன்றைக் கூட்டி பெறப்படும் விடையை 5 ஆல் பெருக்குக.

26. கீழே காட்டப்பட்டுள்ள அட்சரகணித கோவையை சொற்களில் விபரிக்க.

(i) $2x - 5$

(ii) $2\,(3x + 7)$

(iii) $2\left(\frac{x}{2} - 5\right) + 1$

## ஆய்ந்தறி சோதனை

# 1. அட்சரணிதக் கோவைகள் - I

## விடைகளும் அறிவுறுத்தல்களும்

| வினா இல. | விடை | அறிவுறுத்தல்கள் |
|---|---|---|
| 1 | அட்சரங்கள் $x$, $y$, $l$, $x$, m , q<br>எண்கள் 5, 100, 18, 2, | |
| 2 | (i) $3 \times x$ (ii) $3 \times a$ (iii) $6 \times p$ | |
| 3 | (i) 4 p (ii) $10\,x$ (iii) $3\,l$ | |
| 4 | (i) $2 \times a$ (ii) $15 \times d$ (iii) $8 \times y$ | |
| 5. | (i) | |
| 6. | (ii) | |
| 7. | (iii) | |
| 8. | (i) 5 (ii) 10 (iii) 4 | |
| 9 | (i) -2 (ii) -3 (iii) -1 | |
| 10. | (i) $\frac{1}{2}$ (ii) $\frac{2}{5}$ (iii) $-\frac{1}{3}$ | |
| 11. | (iii) | |
| 12. | (i) | |
| 13. | (i) ஒருறுப்புடன் (ii) மூவுறுப்புடன்<br>(iii) ஒருறுப்புடன் (vi) ஈருறுப்புடன்<br>(ii) ஒருறுப்புடன் | |

14. (i) ஒன்று - ஒருறுப்பு (ii) இரண்டு - ஈருறுப்பு
(iii) மூன்று - மூவுறுப்பு

15.

| ஒருறுப்புக் கோவை | ஈருறுப்புக் கோவை | மூவுறுப்புக் கோவை |
|---|---|---|
| 3k,<br>10 $x$,<br>$abc$<br>2$xy$ | 3p - 1,<br>4$x$ - 3y,<br>$l$ - n,<br>$x$- 5<br>2$x$ + $y$, | 2$a$ + $b$ + $c$ ,<br>2 + $x$+ $y$, |

16 (i) $x$, 5t (ii) 2p (iii) 5$a$, $5/x$

17. (i) 3$x$ -$p$, 4$ab$, 2$a$ + 3$b$
(ii) $x$ + $y$
(iii) $\frac{5}{x}$ + 2$y$, 3$a$ + 2$b$, 4$p$ - 2$q$,

18.




19.



| | | |
|---|---|---|
| 20 |  | |
| 21 | (i) $x + 5$<br>(ii) $a$ -2<br>(iii) $p$ - 1 | |
| 22 | (i) $5x$ (ii) $3a$ (iii) $10p$ | |
| 23 | (i) $\frac{2x}{5}$ (ii) $\frac{5a}{3}$ (iii) $\frac{P}{10}$ | |
| 24 | (i) $2x + 5$ (ii) $5a$ - 2 (iii) $\frac{P}{3} - 2$ | |
| 25 | (i) $5(2x + 5)$ (ii) $5(3a - 2)$ (iii) $5(\frac{p}{3} + 1)$ | |
| 26 | (i) $x$ எனக் காட்டப்படும் எண் 2 ஆல் பெருக்கப்பட்டு 5 ஐக் கழித்தல்.<br>(ii) $x$ ல் காட்டப்படும் எண் 3 ஆல் பெருக்கப்பட்டு 7 கூட்டப்பட்டு பெறப்படும் விடையை 2 ஆல் பெருக்குதல்.<br>(iii) $x$ ஆல் காட்டப்படும் எண் இரண்டால் வகுக்கப்பட்டு 5 கழிக்கப்பட்டு பெறப்படும் விடை 2 ஆல் பெருக்கப்பட்டு 1 ஐக் கூட்டுதல். | |

# ஆய்ந்தறி பரீட்சை
# 1. அட்சர கணிதக் கோவைகள் - II
## விடயப் பகுப்பாய்வு

| வினா இல. | குறிக்கோள் இலக்கம் | குறிக்கோள் |
|---|---|---|
| | **1.4** | **நிகர்த்த உறுப்புகளின் கூட்டல்** |
| 1 | 1.4.1 | நிறை எண்கள் இரண்டைக் கூட்டுவார். |
| 2 | 1.4.2 | நிறை எண்கள் இரண்டைக் கூட்டும்போது கணிதச் செய்கைகள் செயற்படும் விதத்தைக் காட்டி அதன் பெறுமானம் காண்பார். |
| 3 | 1.4.3 | நிறை எண்கள் மூன்றைக் கூட்டும்போது கணிதச் செய்கைகள் செயற்படும் விதத்தைக் காட்டி அதன் பெறுமானம் காண்பார். |
| 4 | 1.4.4 | நிறை எண்ணொன்றிலிருந்து நிறை எண்ணொன்றைக் கழிக்கும் போது கணிதச் செய்கைகள் செயற்படும் விதத்தைக் காட்டி பெறுமானம் காண்பார். |
| 5 | 1.4.5 | தரப்பட்ட அட்சரகணித உறுப்புகள் சிலவற்றில் நிகர்த்த உறுப்புகளை தெரிவு செய்வார். |
| 6. | 1.4.6 | நிகர்த்த உறுப்புகளைக் கொண்ட கோவைகளின் கூட்டுத்தொகையை உறுப்புகளின் குணகங்களின் கூட்டுத்தொகையாக எழுதுவதன் மூலம் காண்பார். |
| 7 | 1.4.7 | நிகர்த்த உறுப்புகளைக் கொண்ட அட்சரகணித கோவைகளை சுருக்குவார். |
| 8 | 1.4.8 | ஒன்றுக்கொன்று வேறுபட்ட தெரியாக் கணியங்களை உடைய கூட்டல் குறியீட்டினால் தொடர்புபட்ட உறுப்புகளை கொண்ட அட்சரகணித கோவைகளினல் நிகர்த்த உறுப்புகளை அருகருகில் அமையுமாறு எழுதிக் காட்டுவார். |
| 9 | 1.4.9 | ஒன்றுக்கொன்று வேறுபட்ட தெரியாக் கணியங்களை உடைய கூட்டல் குறியீடு மற்றும் கழித்தல் குறியீட்டினால் தொடர்புபட்ட உறுப்புகளை கொண்ட அட்சரகணித கோவைகளினல் நிகர்த்த உறுப்புகளை அருகருகில் அமையுமாறு எழுதிக் காட்டுவார். |
| 10 | 1.4.10 | ஒன்றுக்கொன்று வேறுபட்ட தெரியாக் கணியங்களை உடைய கூட்டல் குறியீடு மற்றும் கழித்தல் குறியீட்டினால் தொடர்புபட்ட உறுப்புகளை கொண்ட அட்சரகணித கோவைகளினால் நிகர்த்த உறுப்புகளை அருகருகில் அமையுமாறு எழுதிக் கூட்டுவார். |

| வினா இல. | குறிக்கோள் இலக்கம் | குறிக்கோள் |
|---|---|---|
| 11 | 1.4.11 | ஒன்றுக்கொன்று வேறுபட்ட தெரியாக் கணியங்களை உடைய உறுப்புகள் சிலவற்றை எண்கள் சிலவற்றை கூட்டல் மற்றும் கழித்தல் குறியீட்டினால் தொடர்புபட்ட அட்சரகணித கோவைகளை சுருக்கிக் கூட்டுவார். |
| 12 | 1.4.12 | அட்சரகணித கோவை வடிவில் தரப்பட்ட அளவீடுகளை பாவித்து நீளத்தின் கூட்டுத்தொகையைக் காண்பார். |
| | **1.5** | **அட்சரகணிதக் கோவையினை எண் ஒன்றினால் அல்லது அட்சரகணித உறுப்பினால் பெருக்குதல்.** |
| 13 | 1.5.1 | இரண்டிற்கு மேற்படாத தெரியாத கணியங்களைக் கொண்ட அட்சரகணித உறுப்பினை எண்ணொன்றினால் பெருக்குவார். |
| 14 | 1.5.2 | இரண்டு அட்சரகணித உறுப்புகளைக் கொண்ட கோவையினை மறை எண்ணினால் பெருக்குவார். |
| 15 | 1.5.3 | மூன்று அட்சரகணித உறுப்புகளைக் கொண்ட கோவையினை மறை எண்ணினால் பெருக்குவார். |
| 16 | 1.5.4 | மூன்றிற்கு மேற்படாத தெரியாக் கணியத்தைக் கொண்ட அட்சரகணித உறுப்பை விரித்து எழுதுவார். |
| 17 | 1.5.5 | இரண்டு தெரியாக் கணியங்களுக்கு மேற்படாத மற்றும் ஒரு தெரியாக் கணியம் வர்க்கத்துடன் கூடிய அட்சரகணித உறுப்பை விரித்து எழுதுவார். |
| | **1.6** | **பிரதியிடுதல்** |
| 18 | 1.6.1 | குணகம் 1 ஆகவும் ஒரு தெரியாக்கணியத்தை கொண்டதுமான அட்சரகணித உறுப்பு மற்றும் எண்ணினைக் கொண்டவற்றின் கூட்டல் அல்லது கழித்தல் குறியீட்டுடன் தொடர்புடைய அட்சரகணித கோவை களில் தெரியாக்கணியத்திற்காக தரப்பட்ட நேர்ப் பெறுமானத்தை பிரதியிட்டு அட்சரகணிதக் கோவையின் பெறுமானம் காண்பார். |
| 19 | 1.6.2 | குணகம் 1 இலும் அதிகமாகவும் ஒரு தெரியாக்கணியத்தை கொண்டதுமான அட்சரகணித உறுப்பு மற்றும் எண்ணினைக் கொண்ட வற்றின் கூட்டல் அல்லது கழித்தல் குறியீட்டுடன் தொடர்புடைய அட்சரகணித கோவைகளில் தெரியாக்கணியத்திற்காக தரப்பட்ட நேர்ப் பெறுமானத்தை பிரதியிட்டு அட்சரகணிதக் கோவையின் பெறுமானம் காண்பார். |

| வினா இல. | குறிக்கோள் இலக்கம் | குறிக்கோள் |
|---|---|---|
| 20 | 1.6.3 | குணகம் 1 இலும் அதிகமாகவும் ஒரு தெரியாக்கணியத்தை கொண்டதுமான அட்சரகணித உறுப்பு மற்றும் எண்ணினைக் கொண்டவற்றின் கூட்டல் அல்லது கழித்தல் குறியீட்டுடன் தொடர் புடைய அட்சரகணித கோவைகளில் தெரியாத கணியத்திற்காக தரப்பட்ட மறைப்பெறுமானத்தை பிரதியிட்டு ஒவ்வொரு படியிலும் தரப்பட்ட இடைவெளியை நிரப்புவதன் மூலம் அட்சரகணிதக் கோவை யின் பெறுமானம் காண்பார். |
| 21 | 1.6.4 | வலுவுடன் கூடிய தெரியாக்கணியம் மற்றும் எண்ணுடன் தொடர்புடைய மூவுறுப்பினை உடைய அட்சரகணித கோவை யொன்றில் தெரியாத கணியத்திற்காக தரப்பட்ட நேர்ப்பெறுமானத்தை பிரதியிட்டு ஒவ்வொரு படியிலும் தரப்பட்ட இடைவெளியை நிரப்புவதன் மூலம் அட்சரகணிதக் கோவையின் பெறுமானம் காண்பார். |
| 22 | 1.6.5 | தெரியாக் கணியம் இரண்டுடன் கூடிய இரண்டு உறுப்புகளை கொண்ட அட்சரகணித கோவைகளில் தெரியாக் கணியத்திற்காக தரப்பட்ட மறை மற்றும் நேர்ப்பெறுமானங்களைப் பிரதியிட்டு அட்சரகணித கோவையின் பெறுமானம் காண்பார். |
| 23 | 1.6.6 | தெரியாக் கணியங்கள் இரண்டுடன் கூடிய அட்சரகணித கோவைகளில் தெரியாக் கணியத்திற்காக தரப்பட்ட நேர் மற்றும் மறை பெறுமானங் களை பிரதியிட்டு அட்சரகணித கோவையின் பெறுமானம் காண்பார். |
| 24 | 1.6.7 | தெரியாக் கணியங்களில் வலுவினை உடையதும் மூன்று தெரியாக் கணியங்களை உடையதுமான மூவுறுப்புக் கோவையில் தெரியாக் கணியத்திற்காக தரப்பட்ட பெறுமானங்களை பிரதியிட்டு அட்சரகணித கோவையின் பெறுமானம் காண்பார். |
| 25 | 1.6.8 | ஒரு தெரியாக் கணியத்தை உடைய ஈருறுப்புக் கோவையினது தெரியாக் கணியத்திக்காக பின்னமொன்றைப் பிரதியிட்டு அட்சரகணித கோவையின் பெறுமானம் காண்பார். |
